**அளவ்வ பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

-------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 26 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந்திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜுன் 11 ஆந்திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அளவ்வ பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கங்கவத்த ஹுரியகொல்ல மயான இடத்தில் மற்றும் மாபொட்டிய மீகஹமுல வயல் காணியின் பெறமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய சொத்து மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | பெறுமதி மதிப்பிடப்படாத 02 காணிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | ரூபா 103,995 பெறுமதியான 10 கணனி உதிரிப்பாகங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | கணனி உதிரிப்பாகங்கள் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்கீடு செய்யப்படாத 10 கணனி உதிரிப் பாகங்கள் இனங் காணப்பட்டு, கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக் கூற்றுக்களில் 07 கணக்கு விடயங்களில் காணப்படும் ணகளில் காணப்படும் மீதிகளுககு இடையே ரூபா 1,922,523 அவதானிக்கப்பட்டது. | உரிய மீதிகளில் வேறுபாடுகள் இணக்கம் செய்யப்பட்டு சரிசெய்யப்பட வேண்டும். | மோட்டார் வாகன கணக்கீட்டுக் குறைபாடுகளை இவ்வருட பொருள் மெய்மையாய்வின் போது குறிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் |

| | | | |
|---|---|---|---|
| | | | வேறுபாடுகளுக்கு காரணம் கண்டறியப்பட்டு நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஈ) | ரூபா 15,389,078 பெறுமதியான 04 கணக்கு விடயங்களுக்குரிய பத்திரம், நிலையான சொத்துப் பதிவேடு, உப ஏடு என்பன கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகள் உறுதி செய்யப்படக் கூடிய சாட்சிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | காணி மற்றும் கட்டடம் தொடர்பான ஆய்வு இவ்வாண்டு தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், கணக்காய்வின் போது காட்டப்பட்ட முறையில் இவ்வாண்டு தொடக்கம் இயந்திராாதிகள் மற்றும் தளபாடங்கள் பொறுத்துவது தொடர்பாக வேறு வேறு பதிவேடுகள் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் நிதிப் பிரமாணம் 571 | 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவுள்ள ரூபா 733,692 பெறுமதியான 134 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 02 வருடங்களுக்கு மேற்பட்ட வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்திற்கு அமைய செயற்பட வேண்டும். | 2015, 2016 ஆம் ஆண்டுகளிற்கு உரிய பெற்றுக் கொள்ளாத 50 வைப்புக்களுக்கு உரிய ரூபா 76,029.06 பெறுமதியான தொகை 2019.01.30 ஆம் திகதிய நிதிக் குழு தீர்மானம் 4.III இற்கு அமைய வருமானத்திற்கு எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,309,488 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 18,599,699 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| i | வீதவரியும் வரியும் | 3,502 | 2,894 | 3,447 | 366 | 2,946 | 3,461 | 3,744 | 920 |
| ii | வாடகை | 11,530 | 9,899 | 10,003 | 83 | 10,996 | 9,794 | 9,655 | 190 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,928 | 2,061 | 2,093 | - | 1,502 | 1,917 | 1,963 | - |
| iv | ஏனைய வருமானம் | 90,871 | 74,343 | 63,409 | 41,297 | 71,131 | 66,507 | 71,975 | 17,631 |
| | மொத்தம் | 107,831 | 89,197 | 78,952 | 41,746 | 86,575 | 81,679 | 87,337 | 18,741 |

#### 2.2.2 அனுமதிப்பத்திர கட்டணம் மற்றும் வியாபார வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அலவ்வ பிரதேச சபை அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்தினுள் நிறுவப்பட்ட 12 தொலைபேசி சமிக்ஞை கோபுரங்களில் 10 இற்காக 2018 ஆம் ஆண்டிற்கான வியாபார வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | வியாபார வரி அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | 2018 ஆண்டிற்கான வியாபார வரியை செலுத்துமாறு அனைத்து தொலைபேசி நிறுவனங்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

**செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டில் ரூபா 05 மில்லியன் தொகையான நிதியேற்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற நீர்ச் செயற்திட்டங்களின் அறிக்கையின் பிரகாரம் 06 பிரதான செயற்பாடுகளில் முதலாவது செயற்பாடான கிணறொன்றை அமைப்பதற்காக ரூபா 1,696,320 ஆன உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதி அடிப்படையில் 2018 ஒக்தோபர் 11 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 02 மாதங்கள் 14 நாட்களுக்குள் நிர்மாணிக்கப்பட வேண்டிய போதிலும் செயற்திட்டத்திற்குரிய ஏனைய செயற்பாடுகள் 2019 சனவரி 23 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டத்தின் நோக்கமான 125 குடும்பங்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருகக்வில்லை செயற்பாடு | எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளை மக்களிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாறகல்கந்த நீர் முன்மொழிவிற்காக பிரதான அமைச்சின் நிதியேற்பாட்டின் அடிப்படையில் விநியோகிக்கும் பிரதான தாங்கி வரை நிர்மாணிக்கப்படும் கிணற்றிலிருந்து நீரைக் கொண்டு வருவது அதன் முதலாவது கட்டமாக செயற்படுத்த வேண்டியிருந்தது. அவ்வாறே மக்களின் வீடு வரை தேவையான நீரை விநியோகிகப்தற்காக மாரகல்கந்த நீர்செயற்திட்டம் மூலம் நிதிஒதுக்கீட செய்யப்படாமையால் இரண்டாம் கட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டு வரை அச் செயற்திட்டத்திற்காக கோரப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

### 3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டின் போது பெக்கேகா லோடர் மற்றும் மோட்டர் கிரேடர் என்பவற்றிற்காக ரூபா 771,615 செலவிடப்பட்டிருந்த போதும் எந்த நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டதென உறுதிப் படுத்துவதற்கு ஆவணப் படுத்தப்பட்ட சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை | ஆவணப்படுத்திய தகவல்கள் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | சாரதிகளின் செய்யப்பட்ட வேலை குறிப்பு கோவை செய்யப்பட்ட அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு செய்யப்பட்ட வீதிகள் மற்றும் வடிகாண் தொடர்பாக கிடைத்த பிரதேசங்கள், செலவிடப்பட்ட மணித்தியால எணணிக்கை குறிப்பிடப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன் . |

| | | |
|---|---|---|
| (ஆ) ஒரு வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 1,528,569 மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் ரூபா 8,027,743 செலுத்த வேண்டிய கணக்கு மீதியை எவ்வளவு காலமாக காணப்படுகின்றதென இனங்காணப்பட்டிருக்கவில்லை. | ஒரு வருடத்திற்கு மேற்பட்ட மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் ரூபா 8,027,743 தொகையான குறிப்பாக இனங்காணப்பட முடியாத கடன் மீதிகளை இனங்கண்டு தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செலுத்த வேண்டிய மீதிகள் இனங்கண்டு தீர்ப்பனவு செய்யப்படும். |

## 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

### (அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பதவியணியினரில் 13 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த 15 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மேலதிகமாக காணப்பட்டனர். ஆரம்ப பிரிவின் 5 பதவிகள் தொடர்பாக 8 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 3 பதவிகள் தொடர்பாக 5 மேலதிகங்கள் காணப்பட்டன. மேலும் 3 பதவிகள் தொடர்பாக 10 ஊழியர்கள் அமைய அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். | வெற்றிடங்களிற்காக ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கும் மேலதிக பதவியணியினரை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 07 இரண்டாம் மட்டப் பதவிகள் தொடர்பாக 13 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 15 மேலதிக உத்தியோ கத்தர்களாக காணப்படுவது உள்ளூராட்சி திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களாவர். அவ்வாறு ஆரம்ப மட்டத்திலுள்ள 5 பதவிகள் தொடர்பாக 8 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. |

**(ஆ) ஊழியர் கடன்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மரணித்த மற்றும் தகவல்களை கண்டறிய முடியாதமை அடிப்படையில் மாதாந்தம் அறவிடப்படாத ஊழியர் கடன் ரூபா 62,753 ஆக இருந்தது. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திரு. ஆர்.பி.கருணாரத்ன அவர்கள் மரணித்துள்ளதுடன் ஓய்வூதிய திணைக்களத்திற்கு தகவல் அனுப்பிவைக்கப்பட்டுள்ள போதும் மேலும் குறித்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லையென அறிய தருகின்றேன். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**விளைவற்ற சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அளவ்வ பேருந்து நிலையத்தில் வியாபார கடைதொகுதியின் 28 கடைகளில் 12 கடைகள் குத்தகைக்கு வழங்காமல் விளைவற்றுக் காணப்பட்டன. | குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | இக்கடைகளை பெற்றுக் கொள்வதற்கு முன்வரும் குத்தகையாளர் இக்கடைக்காக ஒரே தடவையில் செலுத்த உள்ள ரூபா 1,120,000 தொகையை கொடுப்பனவு செய்வதற்கு சிரமமாகும் என தெரிவித்திருந்தனர். ஆதலால் ஒரே தடவையில் செலுத்தும் பணத்தை குறைப்பதற்குகாக பொதுச் சபைக்கு அனுப்பியுள்ளதுடன் 2018.11.19 ஆந் திகதி நடைபெற்ற பொதுச்சபை தீர்மான இலக்கம். 3.12 இன் கீழ் கேள்வி 5 வரை கழித்து கேள்வி கோருவதற்கு அங்கீகாரம் வழங்கப் பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

**3.5 பெறுகை**

**பெறுகைத் திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்காக பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் 2019 ஆம் ஆண்டிற்காக பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. |